<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 67/2026</u>

2026–ம் ஆண்டு மே மாதம் 14–ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW–2)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சகுந்தலா | தொழில் | | **விவசாயம்** |
| க/பெ. | : | **துரைக்கண்ணு** | **ஊர்** | | கருப்பூர் |
| வயது | : | 50 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

<u>**14.05.2026**</u>

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல் விசாரணை:</u>

நான் கருப்பூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. முதலாவது கையெப்பம் யாருடையது என தெரியாது. கோனேரிராஜபுரம் ரோட்டின் மீது நானும் எனது பக்கத்துவீட்டுக்காரர் பூங்கோதையும் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தோம். திருவையாறு போலீசார் வந்து அத்தாச்சிக்காக கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் போட்டோம். இந்த வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரிக்கவில்லை. **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழுங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 14.11.2025 ம் தேதியன்று 11.45 மணியளவில் நானும் பூங்கோதை என்பவரும் கோனேரிராஜபுரம் சுடுகாடு அருகே ஆடு மேய்த்துக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அப்போது திருவையாறு காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் இந்த வழக்கின் எதிரி கோபிநாத் என்பவருடன் வந்தார்கள் என்றால் இல்லை. எதிரி தாமாக ஆஜர் செய்த TN49BD5935 TVS XL Heavy Duty வாகனத்தை போலீசார் எங்கள்

முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. அதற்க்கு சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இல்லை

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
**திருவையாறு.**